## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி
## முன்னிலை: திருமதி.B.வித்யா,L.L.M.,
## குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.
## வழக்கு எண்.C.C.201/2020

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 19ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கதிர்வேல் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : ஜெயராம் | | |
| கிராமம் | : தேவதானம்பேட்டை | வயது | : 47 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.செல்வமணி HC 2248 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

**1.** நான் தேவதானம்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 சத்யா எனக்கு தெரியும். அவர் என்னுடைய பக்கத்து நிலத்துக்காரர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என் நிலத்தின் வழியாக வருவார்.

2. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை சுமார் 10 மணியளவில் நான் என் நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது எனது நிலத்திற்கு சற்று தூரத்தில் கூச்சல் கேட்டது. எனவே நான் அங்கு சென்றேன். அங்கு பார்த்தபோது அ.சா.1 (சத்யா) அழுது கொண்டிருந்தார். அவருடன் அவரது குழந்தைகள் இருந்தனர். அவருக்கு இரண்டு கைகளிலும் காயம் ஏற்பட்டிருந்தது.எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று நான் கேட்டபோது ஆஜர்எதிரி பிரபு அவரை கத்தியால் வெட்டிவிட்டு ஓடிவிட்டதாக என்னிடம் சொன்னார். நான் மேற்படி சங்கதியை அவரது உறவினரான ஜெயபால் என்பவருக்கு தெரிவித்தேன். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

3. நான் சென்று பார்த்தபோது அ.சா.1 அழுதுகொண்டிருந்தார் என்றால் சரிதான். கூச்சல் சத்தம் கேட்டுநான் அங்கு சென்றேன். சத்தம் கேட்டு சுமார் 10 நிமிடத்தில் அ.சா.1 இருந்தஇடத்திற்கு நான் சென்றேன். நான்

சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பு அங்கு என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 ற்கு எவ்வாறு அடிபட்டது என்பதை நான் கண்ணுறவில்லை என்றாலும் அவர் சொல்லித்தான் அவருக்கு காயம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். நான் தேவதானம்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 கனக்கன்குப்பம் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான்.

4. சம்பவ இடத்திற்கு அ.சா.1 ஏன் வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்துதான் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல, அவருக்கு வெட்டுக்காயம் இருந்தது. இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்தாலும் வெட்டுக்காயம் ஏற்படும் என்றால் வாய்ப்புகள் உண்டு. எதிரி கொடுத்த புகாரின்பேரில் அ.சா.1 ன் கணவர் மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் மீது திருக்கோவிலூர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில்உள்ளது என்றால் அது விவரம் எனக்கு தெரியாது. அ.சா.1 ற்கும் எதிரிக்கும் இடையே பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் அது விவரம் எனக்கு தெரியாது. மேற்படி நீதிமன்றத்தில் எதிரி கொடுத்த புகாரை அவர் திரும்ப பெறவேண்டியும் மற்றும் எதிரி அ.சா.1 ன் கணவருக்கு கொடுத்த பணத்தை ஏமாற்றவேண்டியும் அ.சா.1 இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்த காயத்தை வைத்து எதிரி மீது பொய் புகார் அளித்துள்ளார் என்றாலும் சரியல்ல. நான் கத்தியை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் அ.சா.1 ற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**
**முன்னிலை: திருமதி.B.வித்யா,L.L.M.,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.**
**வழக்கு எண்.C.C.201/2020**

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 19ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.5**

பெயர் : பன்னீர்செல்வம் தொழில் : ஓட்டுனர்
தந்தை பெயர் : ரங்கநாதன்
கிராமம் : கனக்கன்குப்பம் வயது : 36

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.செல்வமணி HC 2248 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

**1.** நான் கனக்கன்குப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 2019ம் வருடம் ஒருநாள் நண்பகல் 12 மணியளவில் தேவதானம்பேட்டையில் இருந்து துர்க்கையம்மன்கோவிலிடம் செல்வதற்காக எனது டிராக்டரில் நான் சென்று கொண்டிருந்தபோது சத்தியமங்கலம் காவலர்கள் தேவதானம்பேட்டை கோவில் அருகே உள்ள ஆஞ்சநேயர் கோவில் அருகே நின்று கொண்டிருந்தனர். அங்கு அவர்கள் சத்யாவை பிரபு என்பவர் வெட்டிய வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தனர். அப்போது நானும், மூர்த்தி என்பவரும் உடனிருந்து பார்வை மகசரில் கையொப்பம் செய்தோம். மேற்படி **பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி குறுக்குவிசாரணை:**

நான்எந்த தேதியில் கையொப்பம் செய்தேன் என்பது தெரியாது. 2019ம் வருடம் கையொப்பம் செய்தேன் என்பது மட்டும் தெரியும். சம்பவ இடத்தை யாரும் எனக்கு காண்பிக்கவில்லை நான் வண்டி ஓட்டி சென்றபோது நானே பார்த்தேன். நான் வண்டி ஓட்டி சென்றபோது சம்பவம் எதுவும் நடக்கவில்லை. சம்பவத்தை பார்த்தவர்கள் என்னிடம் சொன்னதின் பேரில் சம்பவ இடம் குறித்து எனக்கு தெரியவந்தது. எனக்கு சம்பவ இடம் எது என்று தெரியாது என்றாலும் காவலர்கள் கேட்டுக்கொண்டதின் பேரில் கையொப்பம் செய்தேன் என்றாலும்

சரியல்ல. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் ஆஞ்சநேயர் கோவில் அருகில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் ஆஞ்சநேயர் கோவில் குறிப்பிடப்படவில்லை என்றால் அதன் விவரம் எனக்கு தெரியவில்லை. நான் வேறு வழக்கிற்காக கையொப்பம் செய்துவிட்டு இந்த வழக்கிற்காக கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:** இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**
**முன்னிலை: திருமதி.B.வித்யா,L.L.M.,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.**
**வழக்கு எண்.C.C.201/2020**

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 19 ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மும்மூர்த்தி | தொழில் | : கூலி |
| தந்தை பெயர் | : கோவிந்தசாமி | | |
| கிராமம் | : கனக்கன்குப்பம் | வயது | : 33 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.செல்வமணி HC 2248 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

**1.** நான் கனக்கன்குப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 2019 ம் வருடம் ஒருநாள் காலை 10.30 மணியளவில் துர்க்கையம்மன் கோவிலுக்கு செல்லும் வழியில் மண் பாதையில் சத்தியமங்கலம் காவலர்கள் மேற்படி மண் சாலையில் சத்யாவை பிரபு என்பவர் வெட்டிய வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தனர். அப்போது நானும், பன்னீர்செல்வம் என்பவரும் உடனிருந்து பார்வை மகசரில் கையொப்பம் செய்தோம். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி குறுக்குவிசாரணை:**

நான் எந்த தேதியில் கையொப்பம் செய்தேன் என்பது தெரியாது. அன்றைய தினம் என்னுடைய பஞ்சர் ஒட்டும் கடையை திறந்திருந்தேன் என்றால் சரிதான். காலை 10.30 மணிக்கு முன்பும் பின்பும் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்தஇடத்தில் சிவன் கோவில் உள்ளது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சிவன் கோவில் அருகே வேறு வழக்கிற்காக கையொப்பம் செய்துவிட்டு இந்த வழக்கிற்காக கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:** இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.